**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிர் இரசாயனவியல், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிர் இரசாயனவியல், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆவது பிரின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 2003 இன் 01 ஆம் இலக்க உயிர் இரசாயனவியல், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவக விதப்புரையின் 17 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக சட்டத்தின் 108(1) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு**

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

**1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 43 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்ற சொத்தொன்றின் பயன்தரு ஆயுட்காலம் மாற்றமடைதல் கணக்கீட்டு மதிப்பீடுகளில் வேறுபாடாக சீராக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவகம் மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகன பெறுமானத் தேய்வு விகிதம் 10 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை அதிகரித்தல் கணக்கீட்டுக் கொள்கை மாற்றமாக பிற்போட்ட ரீதியில் சீராக்கப்பட்டிருந்தது. அதன் | கணக்கீட்டு மதிப்பீடொன்றாக கருதி நியமத்தின் பிகாரம் 2023 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஒப்பீட்டு ரீதியான பெறுமதியும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் ஆண்டிற்குரிய ரூபா 515,500 ஆன மோட்டார் வாகன பெறுமானத் தேய்வு மற்றும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,062,001 ஆன மோட்டார் வாகனங்களின் இழிவுப் பெறுமதி என்பன நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடுகளின் வேறுபாடாக கணக்கீடு செய்ய வேண்டி இருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட கிரயம் ரூபா 48,862,850 ஆன கணனிகள், ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் நூலகப் புத்தகங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முழுமையாக பெறுமானத் தேய்வு பூர்த்தி செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு வருமானம் வங்கிக் கணக்கில் அமெரிக்க டொலர் 25,726 ஆன மீதி அத்திகதியில் காணப்பட்ட அந்நியச் செலாவணி மாற்ற விகிதத்தின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 897,615 ஆன அந்நியச் செலாவணி மாற்றல் இலாபம் நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது அந்நியச் செலாவணி மாற்றல் இலாபம் உரிய பிரகாரம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களை சரியாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பாடநெறி வருமானத்தில் 04 நிதியங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 10,290,805 ஆன மாற்றல்கள் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஆண்டின் இறுதியின் போது இலாபத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஒதுக்கீடுகளாக காண்பிப்பதற்கு பதிலாக நேரடி வருமானத்தில் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் இருந்து உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று ஊடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய இலக்கம் 30/94 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கை மற்றும் 2019 யூலை 25 ஆம் திகதிய இலக்கம் SC&PMU/Grant/19 என்ற வெளிநாட்டு வளங்கள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுபவம் மற்றும் இணக்கப்பாடின்றி 2014 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்ற கூட்டுமொத்தமான ரூபா 8,923,951 ஆன வெளிநாட்டு மானியம் நிறுவனத்திற்கு நேரடியாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பிரகாரம் ஆராய்ச்சி மானியம் 30/94 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு இதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2016 மார்ச் 01 ஆம் திகதிய இலக்கம் 04/2016 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 4.2 ஆம் பிரிவு | நிறுவனத்தினால் பேணிச் செல்லப்படுகின்ற 04 முழுநேர பட்டப் பாடநெறிகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | 04 பட்டப் பாடநெறிகளுக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 892,445 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 16,588,670 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 17,481,115 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிப்பிற்கு சான்றிதழ்பத்திர பாடநெறி வருமானம் ரூபா 3,482,783 இனால் அதிகரித்தமை மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 8,428,222 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் ஒட்டுமொத்த வருமானத்தில் 74 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு அரசாங்கத்தின் மானியங்களை உள்ளடக்கி இருந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அரசாங்கத்தன் மானியம் 1.9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் முதலீட்டின் அடிப்படையிலான வட்டி வருமானம் 202 சதவீதத்தினாலும், பராமரிப்பு செலவினம் 167 சதவீதத்தினாலும் உயர்வடைந்திருந்தது.

### 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

**(அ) நடைமுறை விகிதம்**

கடந்த ஆண்டில் 2.72:1 ஆன நடைமுறை விகிதம் நடப்பாண்டில் 4.14:1 ஆகக் காணப்பட்டது.

**(ஆ) விரைவுச் சொத்து விகிதம்**

கடந்த ஆண்டில் விரைவுச் சொத்து விகிதம் 2.66:1 ஆகக் காணப்பட்டதுடன் நடப்பாண்டில் அந்த விகிதம் 4.06:1 ஆகக் காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் தற்காலிக விஞ்ஞான உதவியாளர் (ஒப்பந்த அடிப்படை) 02 பதவிகள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் போது அந்த பதவிக்காக 07 பேர் சேர்க்கப்பட்டமையினால் 05 பதவியணியினர் மிகையாகக் காணப்பட்டனர். கையளித்தல் அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ள அந்த மிகையான 05 உத்தியோகத்தர்களுக்காக 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 2,251,884 உழைக்கப்பட்ட வருமானத்தில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கல்விசார் பிரிவுகளில் காணப்படுகின்ற இயலளவின் அடிப்படையில் இந்த பதவிகளுக்கு மேலதிகமாக கையளித்தல் அடிப்படையில் தற்காலிகமாக விஞ்ஞான உதவியாளர் (Scientfic Assistant – on assihmment basis) 05 பேர் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு உழைக்கப்பட்ட வருமானத்தில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் பதவியணியனரை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |